விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 162 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 16 வெள்ளிக்கிழமை (30.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## முன்னாள் அமைச்சர்களுக்கு கடூழியச் சிறை

# மகிந்தானந்தவுக்கு 20 ஆண்டுகள்

# நளின் பெர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகள்

## கொழும்பு நீதிமன்றம் அதிரடி உத்தரவு



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு 53 மில்லியன் ரூபாய் இழப்பை ஏற்படுத்திய குற்றத்துக்காக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதித்து கொழும்பு நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி

# சூட்டுக்காயங்கள், குண்டுவெடிப்பால் இறப்புக்கள் சம்பவித்துள்ளது

## முல்லைத்தீவு நீதிமன்றில் சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை

(முல்லைத்தீவு)



துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள், குண்டுவெடிப்புகளால் மனித இறப்புகள் இடம்பெற்றுள்ளன என கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பாக சட்டவைத்திய அதிகாரி குழுவினரால் தயாரிக்கப்பட்ட முற்றுமுழுதான அறிக்கை நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அவ் அறிக்கையில் இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறையில் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் பருத்தித்துறை

15ஆம் பக்கம் பார்க்க

## சித்தங்கேணியில் இளைஞன் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சித்தங்கேணியில் இளைஞன் ஒருவர் திடீரென மரணமடைந்

02ஆம் பக்கம் பார்க்க

## யாழில் இலஞ்சம் பெற்ற கிராம சேவகர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் இலஞ்சம் பெற்ற கிராம சேவகர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய இலஞ்சமாக பென்ட்ரைவினை பெறுவதற்கு முயற்சித்தவேளை இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதச் சட்டம் நீக்கப்படும் பாதுகாப்புக்கு மற்றொரு சட்டம் அவசியம்

### நீதியமைச்சர் ஹர்ஸன நாணயக்கார



(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் ஆனால் வெளிநாட்டு அச்சுறுத்தல்களில் இருந்து தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மற்றுமொரு சட்டம் அவசியம் என நீதியமைச்சர் ஹர்ஸன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பயங்கர

15ஆம் பக்கம் பார்க்க

## நல்லிணக்கத்தை ஏற்படுத்த வடக்கில் சிங்களவர்கள், முஸ்லிம்களை குடியமர்த்துக

### சரத் வீரசேகர தெரிவிப்பு



(கொழும்பு)

நல்லிணக்கத்தை ஏற்படுத்த வடக்கு மாகாணத்தில் சிங்களவர்கள், முஸ்லிம்களைக் குடியமர்த்துக என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

02ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு ரயில் சேவைகள் ஒரு மாதத்துக்கு நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மாகோவிலிருந்து அநுராதபுரம் வரையிலான பிரதான புகையிரத மார்க்கத்தில் ஐந்து பாலங்களில் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளதால், மீண்டும் ஒரு மாத காலத்திற்கு வடக்கு ரயில் சேவைகள் நிறுத்தப்படும் என புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பாலங்கள்

02ஆம் பக்கம் பார்க்க

## நடுவு நிலை தவறாத நடுநிலை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தானந்தவுக்கு...

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது சதொச நிறுவனத்தினூடாக 14 ஆயிரம் கரம் போர்ட்கள் மற்றும் 11 ஆயிரம் டாம் போர்ட்கள் இறக்குமதி செய்ததன் ஊடாக அரசாங்கத்துக்கு 53 மில்லியன் ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தியதாக அவர்கள் இருவர் மீதும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றம் சுமத்தியிருந்தது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றின் மூவர் அடங்கிய நீதிபதிகள் ஆயத்தில் விசாரணைக்கு வந்த போது, சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் வர்த்தக அமைச்சருமான நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருட கடூழிய சிறைத் தண்டனையும் முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகேவுக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (ம-4,7)

## வடக்கு...

அகற்றப்பட்டு புதிய பாலங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஐந்து பாலங்கள் ஏற்கனவே நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தியக் கடன் உதவியுடன் ஐந்து பாலங்கள் அமைக்கப்படவுள்ளதோடு, சுமார் 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும். பொசன் பௌர்ணமி தினத்துக்குப் பின்னர் கட்டுமானப்பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தியக்கடன் திட்டத்தின் கீழ் 9,127 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இந்தப் புகையிரத மார்க்கம் புனரமைக்கப்பட்டு கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் திறக்கப்பட்ட போதிலும், சமிக்ஞை கட்டமைப்பின் கட்டுமானம் தாமதமாகி வருகிறது. சமிக்ஞைகள் இல்லாததால், தற்போது அந்தப் பகுதியில் டோக்கன் முறையில் புகையிரதங்கள் இயக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில்இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியாவுடன் கையெழுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த மாதத்திற்குள் சமிக்ஞை கட்டமைப்பின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டால் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் பணிகளை முடிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

## இளைஞன்...

துள்ளார்.

இதில் சித்தங்கேணி கீரிமலை வீதியைச் சேர்ந்த கணேசலிங்கம் ராஜ்குமார் (வயது 37) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் இரவு உறக்கத்துக்குச் சென்றுள்ளார். அவர் சங்கானை சந்தையில் வியாபாரம் செய்கின்றவர் என்பதால் அவரை வியாபாரத்துக்கு அனுப்புவதற்கு உறவினர்கள் நேற்றுக் காலை எழுப்ப முற்பட்டவேளை அசைவற்றுக் காணப்பட்டார்.

இந்நிலையில் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மாரடைப்புக் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7,104)

## நல்லிணக்கத்தை...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் 2025.03.28 ஆம் திகதியன்று காணி திணைக்களத்தால் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் சமூக கட்டமைப்பில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தி பாரிய எதிர்ப்பினை உருவாக்கினார்கள்.

1931ஆம் ஆண்டு இயற்றப்பட்ட காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நாட்டின் சகல மாகாணங்களிலும் உள்ள காணிகள் நிர்ணயிக்கப்பட்டு, யுத்த சூழல் மற்றும் ஏனைய காரணிகளால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணக் காணிகள் அளக்கப்படவில்லை.

பிரசுரிக்கப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளின் காணிகளை நிர்ணயம் செய்வதற்கு விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.வடக்கு காணிகள் தமக்கு சொந்தம் என்று குறிப்பிடுபவர்கள் காணி உரித்து பத்திரங்களை மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.இல்லையேல் குறித்த காணிகள் அரசுடமையாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.தமது காணி என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் அதற்கான ஆவணங்களை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.இதில் என்ன பிரச்சினை உள்ளது.


நாட்டில் உள்ள சகல மாகாணங்களின் காணிகளும் நிர்ணயம் செய்யப்படும் போது ஏன் வடக்கு மாகாண காணிகள் நிர்ணயம் செய்யப்பட கூடாது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எதிர்ப்புக்கு அரசாங்கம் அடிபணிந்தால் அது சமஷ்டியாட்சிக்கு இணக்கம் தெரிவித்ததாக அர்த்தப்படும்.நாட்டை பிளவுப்படுத்தும் பிரிவினைவாத கொள்கையுடன் தான் இலங்கைத் தமிழரசுக் கட்சி செயற்படுகிறது. பிரிவினைவாத கொள்கைக்காகவே போராடுகிறது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக செயற்படுத்தினால் இன நல்லிணக்கம் பாதிக்கப்படும் என்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடுகிறார்கள்.1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் இருந்து 25 ஆயிரம் சிங்களவர்களும் 15 ஆயிரம் முஸ்லிம்களும் 24 மணிநேரத்துக்குள் பலவந்தமான முறையில் வெளியேற்றப்பட்டார்கள். நல்லிணக்கத்துக்கு முன்னுரிமை வழங்குவதாயின் இவர்களின் பரம்பரையினரை வடக்கில் மீண்டும் குடியமர்த்த வேண்டும் என்றார். (ம-4,7)






பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி 02.06.2025 அன்று இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு பதவியுயர்வு பெறும் எமது ஆசிரியர்கள்



திரு. பா.நிசாந்தன்
NDT(Sp.Ed), B.A, P.G.D.E



திரு. ப.விஜிந்தன்
NDT(Pri), B.A, Dip.in.Coun, P.G.D.E, M.Ed

ஆகிய இருவரும் மென்மேலும் வளர்ந்து கல்விச் சமூகத்திற்கு சேவையாற்றுவதுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வேண்டும் என பாராட்டி வாழ்த்துகிறோம்.

Best Wishes!

வாழ்த்துவோர் : அதிபர், ஆசிரியர்கள்
யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை

(4414)

வருடாந்தப் பொதுக் கூட்டம்
புனித ஹென்றியரசர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம், இளவாலை.

திகதி : ஞாயிறு 15, ஆனி 2025
நேரம் : காலை 10:30 மணி
இடம் : கல்லூரி பிரதான மண்டபம்

புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு அங்கத்தவர்களாகிய உங்களை அன்புடன் அழைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். இக்கூட்டத்தில் கீழ்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும்

நிகழ்ச்சி நிரல்

1. ஆசி உரை – பாடசாலை அதிபர்
2. செயலாளர் அறிக்கை
3. பொருளாளர் அறிக்கை
4. புதிய நிர்வாகத் தெரிவு
5. ஏனைய விடயங்கள்

உறுப்பினர் எவரேனும் இக்கூட்டத்தில் பரிசீலனைக்காக தீர்மானம் எதையாவது முன்வைக்க விரும்பினால், தீர்மானத்தின் விளக்கம் மற்றும் நோக்கத்தை தெளிவாக குறிப்பிட்டு அதனை ஆனி மாதம் 10ம் திகதி 2025ற்கு முன்னதாக சங்கத்தின் செயலாளருக்கு வட்ஸ்அப் (Whats App-0776780894) வழியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம், இளவாலை.

(C-3078)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டம் தகர்த்தெறியப்பட வேண்டும்

## மாற்றீட்டு சட்டமும் தேவையில்லை

### பல அமைப்புக்கள் இணைந்து நீதியமைச்சிற்குக் கடிதம்

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எவ்வித தாமதமும் இன்றி உடனடியாக நீக்கவேண்டும் மாற்றீடாக புதிய சட்டம் எதனையும் கொண்டுவரக்கூடாது என 240இற்கு மேற்பட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சட்டத்தரணிகள், மதகுருமார்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

நீதியமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.சிவில் சமூக அமைப்புகளும் தொழிற்சங்கங்களும் இந்தக் கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றீடாக புதிய சட்டம் எதனையும் கொண்டு வரக் கூடாது என வேண்டு கோள் விடுத்துள்ள இவர்கள் ஐந்து பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளனர்.

நீதியமைச்சருக்கான கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு புதிய சட்டத்தைக் கொண்டுவருவது குறித்து பரிந்துரைகளை, கருத்துக்களை, யோசனைகளை முன்வைக்குமாறு கோரும் பத்திரிகை அறிவிப்புக் குறித்து இலங்கையின் கரிசனை கொண்டுள்ள பிரஜைகள் என்ற அடிப்படையில் நாங்கள் பதிலளிக்கின்றோம்.

பொதுமக்களிற்கு தங்கள் கருத்துக்கள், யோசனைகள் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு வெறுமனே இரண்டு வார கால அவகாசம் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சி குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.



பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியினர் பாராளுமன்ற தேர்தலிற்கு முன்னர் பொது மக்களிற்கு உத்தரவாதம் வழங்கியிருந்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற மிகக்கடுமையான ஒடுக்குமுறைச் சட்டங்களை அரசாங்கம் தொடர்ந்தும் தக்க வைக்காது என்ற வெளிப்படையான வாக்குறுதியும் வழங்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டம் அவசியம் என வெளியாகும் அறிக்கைகளும், புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்து ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையும், மக்களிற்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை மீறும்-செயல்.

இந்தக் குழுவில் முக்கியமானவர்கள் உள்வாங்கப்படவில்லை, பெருமளவிற்கு அரசாங்க அதிகாரிகள் காணப்படுகின்றனர் இராணுவத்தினரும், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளும் காணப்படுகின்றனர். ஆனால் பாதிக்கப்பட்டவர்களோ அல்லது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களோ தமிழ், முஸ்லீம் சமூகத்தினரோ இடம்பெறவில்லை.

இதன் காரணமாக இந்தக் குழு மக்களின் பார்வையில் எந்த நியாயதன்மையும் இல்லாததாகக் காணப்படுகின்றது. மக்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளக்கூடிய அமைப்பாக, குறிப்பாக எங்கள் சமூகத்தில் உள்ள ஆபத்தான நிலையில் உள்ளவர்களின் நலன்களை கருத்தில் கொள்ளக்கூடிய அமைப்பாக இது காணப்படவில்லை.

ஈவிரக்கமற்ற பயங்கரவாத தடைச்சட்டத்தினால் மனித உயிர்களிற்கு ஏற்பட்ட பாரிய அளவு இழப்புகள். ஏற்படக் கூடிய இழப்புகள் குறித்து நீதியமைச்சர் தீவிரமாக ஆராயவேண்டும் என நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# புகையிலை பொருட்களுக்காக நாளாந்தம் 520 மில்லியன் செலவு

(கொழும்பு)

நாட்டில் நாளாந்தம் 520 மில்லியன் ரூபாய், புகையிலை பொருட்களுக்காக செலவிடப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சர்வதேச புகைத்தல் தடுப்புத் தினம் மே மாதம் 31 ஆம் திகதி அனுஷ்டிக்கபடுகிறது, இந்தத் தினத்தை முன்னிட்டு "புகையிலைத் துறையின் தலையீடுகளை வெளிக்கொணருவோம்" எனும் தொனிப்பொருளில் ஊடகவியலாளர் சந்திப் பொன்று தேசிய நூலக ஆவண வாக்கல் சேவைகள் சபையில் நடைபெற்றது.

அதில் இந்த தொனிப் பொருள், இளைஞர்களை இலக்கு வைத்து செயற்படும் புகையிலை நிறுவனங்களின் சூட்சு மமான விளம்பரங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதை நோக்க மாகக் கொண்டுள்ளது.

அத்துடன் புகைத்தலால் இலங்கையில் ஆண்டுக்கு 20,000 பேர் உயிரிழக்கின்றனர்.

இது ஒரு நாட்டின் சுகாதாரத்திற்கு பாரிய அச்சுறுத்தலாக அமைகின்றது என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் நாளாந்தம் 520 மில்லியன் ரூபாய் புகையிலை பொருட்களுக்காக செலவிடப்படுகின்றது என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இறக்குமதி செய்யப்பட்ட உப்பு சந்தைக்கு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 2,800 மெட்ரிக் தொன் உப்பு சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேசிய உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உணவுக்காக இறக்குமதி செய்யப்பட்ட இந்த உப்பு கடந்த 23 ஆம் திகதி நாட்டுக்கு வந்ததாகவும், உள்ளூர் உப்பு விற்பனை முகவர்கள் மூலம் சந்தைக்கு விடுவித்து நுகர்வோருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய உப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை உப்பு நிறுவனம் 10,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்து வருவதாகவும், புறக்கோட்டை இறக்குமதியாளர்கள் உட்பட 100 இற்கும் மேற்பட்ட இறக்குமதியாளர்கள் மேலும் 100,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## ஜனாதிபதி ஒருங்கிணைப்புக்குழு தலைவர்கள் சந்திப்பு



(கொழும்பு)

2026 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்திற்கான பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது மாவட்ட மட்டத்தில் மக்களின் அடிப்படை மற்றும் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மாவட்ட அளவில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் மக்களின் ஏனைய அவசர அபிவிருத்தித் தேவைகள் தொடர்பில் இனங்கண்டு, அத்திட்டங்களை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (நி)

மணிவிழா வாழ்த்து



எமது பாடசாலையில் பணியாற்றி 31.05.2025 நாளை ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியர்

திருமதி.ஞானரோகினி ஜெகநாதன் (B.F.A,PGDE)

அவர்களை சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்


Best Wishes

(1179)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிய தடகள சம்பியன்ஷிப் இலங்கைக்கு வெண்கலப் பதக்கம்



தென் கொரியாவின் குமி விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் 26 ஆவது ஆசிய மெய் வல்லுநர் சம்பியன்ஷிப்பில் இலங் கைக்கான முதலாவது பதக்கத்தை காலிங்க குமாரகே வென்றெ டுத்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றதன் மூலம் காலிங் க குமாரகே வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

400 மீற்றர் ஓட்டப் போட்டியை 45.55 செக்கன்களில் ஓடி முடித்து அவர் மூன்ராம் இடத்தைப் பெற்றார். அப் போட்டியை 45.33 செக் கன்களில் நிறைவுசெய்த கட்டார் வீரர் அமார் இஸ்மாயில் வை. இப்ரா ஹிம் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார். ஜப்பான் வீரர் கென்டாரோ சாட்டோ (45.50 செக்.) வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார். (நி-3)

## சென்னை ரசிகர்களின் அன்புக்கு நன்றி

### பத்திரன உருக்கம்

10 அணிகளுக்கிடையிலான 18 ஆவது ஐ.பி.எல் தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதில் 5 முறை சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் வழக்கத்திற்கு மாறாக தடுமாற்றமாக செயற் பட்டு வரலாற்றில் முதல் முறையாக புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தைப் பிடித்து வெளியேறியது. முன்னதாக நடப்பு சீசனின் தொடக்க கட்டத்தில் சில போட்டிகளில் விளையாடிய சென்னை அணியின் தலைவரான ருதுராஜ் கெய்க்வாட் காயம் காரணமாக தொடரிலிருந்து விலகினார்.

இதனால் சென்னை அணியின் தலைவராக மீண்டும் மகேந்தி ரசிங் டோனி நியமிக்கப்பட்டார். ஆனால் அவரது தலைமையிலும் சுமாரான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென்னை அணி புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடித்தது.

இந்த நிலையில், சென்னை கடைசி இடம் பிடித்தது தொடர்பாக சென்னை அணி வீரர் பத்திரன கூறியதாவது. நாங்கள் எதிர்பார்த்த தொடராக இது அமைய வில்லை. ஆனால், இந்த ஏற்றத்தாழ்வுகள் மத்தியில், ஒன்று மட்டும் மாறாமல் இருந்தது.

அது சென்னை இரசிகர்களின் அன்பும், ஆதரவும். என்மீது நம்பிக்கை வைத்த அணிக்கும், நிர்வா கத்திற்கும், ஒவ்வொரு ஆதரவாளருக்கும் நன்றி. தொடர்ந்து கடினமாக உழைப்பேன். இந்தக் குடும்பத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கு நன்றியுள்ள வனாக உணர்கிறேன். எனத் தெரிவித்துள்ளார். (நி-3)





# INVITATION FOR BID

## கேள்வி அறிவித்தல்

### சபை நிதி வேலைத்திட்டம்-2025

### கரைச்சி பிரதேச சபை-கிளிநொச்சி

1. கரைச்சி பிரதேச சபையின் சபை நிதி மற்றும் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டங்களிற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை (DivPC)** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி CIDA Registration & Grade பொருத்தமான தரத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் **தரவு அட்டவணை (Schedule / Bidding Data ) கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. (தொலைபேசி: 021 228 5761, தொலைநகல்: 021 228 5690, E-Mail: kilinochchi1kps@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை **09.00** மணி முதல் **14.00** மணி வரை **16.06.2025** ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி** எனும் இடத்திலிருந்து **30.05.2025** ஆம் திகதியிலிருந்து **16.06.2025** ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணம் (கீழுள்ள அட்டவணையில் உள்ளவாறு வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி கிளிநொச்சி** எனும் முகவரிக்கு **17.06.2025** ஆம் திகதி காலை **10.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8. கேள்விப் பிணை தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

9. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் **2025.06.06** ஆம் திகதி பி.ப **15.00** மணிக்கு கரைச்சி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| | |
|---|---|
| Document Issuing/ Purchasing Period | **From 2025.05.30 – 2025.06.16** |
| Pre – Bid Conference | **At 03.00 Pm on 2025.06.06** |
| Closing and Opening of Bid | **At 10.00 Am on 2025.06.17** |

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் (With out Vat) | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: தொகை (ரூபா) | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப்படாத கட்டணமாக |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/KN/KPS/2025/ PU-02 /C.W 08 | ஆனந்தபுரம் Naita அருகாமை வீதித்திருத்தம். | 21.186 | 90 நாட்கள் | C6 or above ( Highway) | 02/09/2025 | 318,000.00 | 30/09/2025 | 6000.00 |
| 02 | NP/KN/KPS/2025/ MAIN- 01 | கிளிநொச்சி சேவைச் சந்தை பராமரிப்பு வேலைத்திட்டம் | 4.237 | 90 நாட்கள் | C8 or above ( Buildings) | 05/08/2025 | 64,000.00 | 02/09/2025 | 2500.00 |
| 03 | NP/KN/KPS/2025/ PU-03 /C.W 01 | தர்மபுரம் 9ம் யூனிற் B1,B2 வீதி திருத்தம். | 4.237 | 90 நாட்கள் | C8 or above (Highway) | 05/08/2025 | 64,000.00 | 02/09/2025 | 2500.00 |
| 04 | NP/KN/KPS/2025/ PSDG-01 | இரணைமடு சந்தை நீர்த்தாங்கி அமைத்தல். | 2.542 | 90 நாட்கள் | C9 or above (Buildings) | 05/08/2025 | 39,000.00 | 02/09/2025 | 2000.00 |
| 05 | NP/KN/KPS/2025/ PSDG-02 | உருத்திரபுரம் சந்தை நீர்த்தாங்கி அமைத்தல். | 2.372 | 90 நாட்கள் | C9 or above ( Buildings) | 05/08/2025 | 36,000.00 | 02/09/2025 | 2000.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**கரைச்சி பிரதேசசபை,**
**கிளிநொச்சி.**

(2025.05.30)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ.து)

## வெளிவாரியாக விண்ணப்பம் கோரல்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் வெற்றிடமாகவுள்ள பொதுமுகாமையாளர் பதவிக்கு வெற்றிடம் நிரப்புவதற்காக தகமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| **பதவிக்கான பெயர்** | **:- பொதுமுகாமையாளர்** |
| குறியீட்டு இலக்கம் | :- 101/06 |
| சம்பள அளவுத்திட்டம் | :-37045-490X10-540X10-47345 (02/2025 சுற்றுநிரூபம் )<br>444540-5880X10-6480X10-568140 |

(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் சுற்றுநிரூபத்திற்கு அமைவாக கொடுப்பனவு வழங்கப்படும்)

வெற்றிடம் :-01

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ). கூட்டுறவு ஊழியர் 07 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 08 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ). அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்/ அதற்கு சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல்/ வியாபாரப்புள்ளிவிபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்/

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ). கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக்/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப்பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 07 ஆண்டு கால அனுபவம்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களினை தலைமைக் காரியாலயத்தில் பெற்று விண்ணப்பப் படிவங்கள் தகைமைச் சான்றிதழ்களின் போட்டோப்பிரதிகளுடன் 11.06.2025 ஆம் திகதிக்கு முன்னர் **"தலைவர், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பிப்பிலிச்சந்தி மானிப்பாய்"** எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்**
**கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,**
**பிப்பிலிச்சந்தி, மானிப்பாய்.**

30.05.2025

(சி-3075)

# தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ-து)

## பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

| | |
|---|---|
| **பதவி** | **:- கணக்காளர் (நிரந்தரம்) - 01** |
| **சம்பள குறியீட்டு இலக்கம்** | **:- 104/09** |
| **சம்பள அளவு திட்டம்** | **:- 35200-450×10-460×10-44300** |
| **சுற்று நிருப இலக்கம்** | **:- 02/2025** |

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத்திட்டப்பதவியில் கணக்காளர்/ உள்ளகக் கணக்காய்வாளர் / கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பளத்திட்டப் பதவியில் உள்ளகக் கணக்காய்வாளர்/ கணக்குப்பதிவாளர் கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) இலங்கைத் தொழில்நுட்பக்கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை / மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 அண்டு கால அனுபவம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு தொடர்பாக பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்**

- வயதெல்லை - 18-45 வயதிற்கு உட்பட்டவர்கள்
- தற்போது கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிபவராயின் வயதெல்லை கருத்திற்கொள்ளப்படமாட்டாது
- நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.
  ஏனைய கூட்டுறவு நிறுவனங்களில் தற்போது பணியாற்றுபவர்களாயின் அச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பம் செய்யப்பட வேண்டும்
- பதவிக்கு தெரிவு செய்யப்படின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கமைவாக நிர்வாகசபையால் விதிக்கப்படும் ரொக்கப் பிணையும், ஆதாரப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.
- தேவையான அனைத்து ஆவணங்களையும் பிரதிசெய்து இவ்விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பங்கள் யாவும் பதவிக்கான பெயர் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி வரணி. எனும் முகவரிக்கு குறிப்பிட்ட திகதிக்கு பிந்தாது அனுப்புதல் வேண்டும்
- கணக்குப் பதிவுகளை கணனி மூலம் மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- காலத்திற்கு காலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கமைவாக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி 09.06.2025
- மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள -021 205 0854

**க.செல்வேஸ்வரன்**
**தலைவர், தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ-து)**

(சி-3073)

# இராசிபலன்

**30.05.2025**
**வைகாசி 16, வெள்ளிக்கிழமை**
**சதுர்த்தி பின்னிரவு 2.18 மணிவரை**

**புநர்பூசம் பின்னிரவு 2.12 மணிவரை**
**சுபநேரம் 5.52-7.22 மணிவரை**
**இராகுகாலம் 10.22-11.52 மணிவரை**
**சதுர்த்தி விரதம்**

**சந்திராஷ்டமம்- கேட்டை**

**வளவன்**


**மேஷம்**
எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


**ரிஷபம்**
அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


**மிதுனம்**
நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்கும் செல்லும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.


**கடகம்**
காரிய அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது.


**சிம்மம்**
வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கௌரவமான நாள்.


**கன்னி**
திறமைகள் வெளிப்படும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


**துலாம்**
எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


**விருச்சிகம்**
வரவும் செலவும் சமமாகும் நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உறவினர் நண்பர்கள் தொடர்பில் சில கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.


**தனுசு**
பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.


**மகரம்**
இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நாவன்மையில் நல்ல பெயர் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.


**கும்பம்**
புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், இனிமையான நாள்.


**மீனம்**
வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், பயணங்களால் பலனுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**உடைவதை விட வளைந்து கொடுப்பதே பாராட்டுக்குரியது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சண்டிலிப்பாய் கல்வளை பாரதி விளையாட்டுக்கழகம் அங்குரார்ப்பணமும் சித்திரை திருவிழாவும் அண்மையில் காளியம்பாள் ஆலய முன்றலில் தே.சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

# 'ஆகஸ்ட்' மாதம் பண்பாட்டு விழா

## ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பண்பாட்டு விழா எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பேரவைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலரும், பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதன் போதே மாவட்ட செயலர் ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இக் கலந்துரையாடலில் உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி, மாவட்ட மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (நி-33)

# வடக்கு மாகாண பிரதம செயலர் கடற்றொழில் அமைச்சர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரை வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட திருமதி தனுஜா முருகேசன் நேற்று முன்தினம் புதன்கிழமை மரியாதை நிமித்தமாக யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்தித்தார்.

இதன்போது அமைச்சர் வாழ்த்துக்களை தெரிவித்ததோடு, வட மாகாணத்தின் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். (நி-3)



பொலிகண்டி - மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் கோவில் கும்பாபிசேக தின சங்காபிசேகம் அண்மையில் நடைபெற்றது. (படம்: மகாலிங்கம்)

# வேளாங்கன்னி ஆலய வருடாந்த திருவிழா

(குருநகர்)

குருநகர் புனித வேளாங்கன்னி அன்னை ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஆயத்த வழிபாடுகள் எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதிகளில் மாலை 5 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும். அத்துடன் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை பெருவிழாத் திருப்பலியும் மறுநாள் சனிக்கிழமை காலை 6 மணிக்கு திருச் செபமாலையுடன் அன்னையின் திருவிழாத் திருப்பலியும் இடம்பெறவுள்ளதென பங்குத் தந்தை மற்றும் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-3-106)



கொடிகாமம்-தாவளை இயற்றாலை துர்க்கா மழலைகள் கல்விப் பூங்கா முன்பள்ளியின் 2025 ஆம் ஆண்டிற்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத்தலைவர் திருமதி சி.விஜிதா தலைமையில் இடம்பெற்றது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 180 | 450 | 350 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 | 250 | 450 |
| தக்காளி | 700 | 750 | 800 | 650 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 280 | 240 |
| கோவா | 450 | 500 | 550 | 350 | 500 |
| கரட் | 650 | 750 | 800 | 700 | 800 |
| பூசணி | 160 | 180 | 150 | 160 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 220 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 280 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 120 | 110 | 150 |
| பாகற்காய் | 600 | 800 | 700 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 100 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 200 | 200 | 400 |
| பயற்றங்காய் | 150 | 150 | 100 | 150 | 100 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 550 | 500 | 450 | 450 | 600 |
| கறிமிளகாய் | 800 | 700 | 400 | 550 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 1000 | 800 | 1500 |
| போஞ்சி | 400 | 500 | 550 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | 200 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 120 | 120-180 | 150 | 100 | 160 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 150 | 120-200 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 650 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 600 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- | -- |

# போதைவஸ்துகளுடன் பலர் சுன்னாகத்தில் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் மற்றும் நேற்றைய தினங்களில் சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கைகளின் போது எழுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் மூவர் போதை மாத்திரைகளுடனும் இருவர் ஐஸ் போதைப் பொருளுடனும் இருவர் ஹெரோயின் போதைப் பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-3-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்-புங்கங்குளம் வில்வையடி

## ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த

# பொங்கல் விழாச் சிறப்பிதழ்- -30.05.2025


## வில்வையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை

**அம்பாளின் அருட்பார்வை**

யாழ். குடாநாட்டில் புங்கங்குளம் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியே ஆகும். ஆனால் இந்தப் புங்கங்குள அம்மனின் அருட் தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்டதொன்றன்று. இன்றைக்கு சுமார் 59 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்தில் தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்.

**அம்பிகையின் தெய்வீகப் புதுமை**

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவசநிலை, அம்பாளைத் தரிசிக்க வரும் போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்குப் பூசைக்காக அடியார்கள் கொண்டு வந்து வைக்கின்ற பால், பழங்கள் , மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாத போது இங்கு நடக்கிறதோர் இனந் தெரியாத தெய்வீக நடமாட்டம் , அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம்பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றன.



**வில்வ மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை**
**அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை**
**பொல்லா வினையகல-- புங்கங்குளத் தூர் புகுந்து**
**கல்லும் கசிந்து ருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.**

**பொங்கல் விழா சிறப்புற பிரார்த்திப்போரும்**
**விளம்பர அனுசரணையாளர்களும்**

**அம்பிகையின் அருட்தோற்றம்**

அழகிய பெருந்தெரு அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை. அறிவும் ஆற்றலும் தெய்வீகமும் நிறைந்திருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத் தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது. அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வ மரம். இந்த மரத்தின் அடியிலே தான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் ஆலய வளவுக்குள் குடியிருந்த அடியார்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் தெய்வீக மேலீட்டினால் பல தடவைகள் கண்டு வியந்து அந்த இடத்தில் சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப் போக்கில் அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ். நகரில் புங்கங்குளப் பகுதியில் வில்வ மரத்தடியில் அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினாலும் இந்த ஆலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயம்.

**நம்பியே கை தொழுவோம் நாம்.**

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரில் புங்கங்குளம் பகுதி வில்லை அடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உயர்வார்களாக.

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்
அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்
நம்பியே கைதொழுவோருக்குப் பிணி நீங்கிடுமே

*கே. வைத்திலிங்கம்*

(சி-3074)


கட்டடப் பொருட்கள்,உழவு இயந்திரம், லான்ட்மாஸ்ரர் உதிரிப் பாகங்கள் விநியோகஸ்தர்.
**நந்தினி என்ரபிறைஸ்**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**இளவரசி சேலைச் சோலை**
(பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்ஜியம்)
125, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 021 222 2503

**புதிய தம்பிப்பிள்ளை அன் சண்**
இல 54. புங்கன்குளம் வீதி. கொழும்புத்துறை.
சகல விதமான கால்நடைத் தீவனங்களும் மருந்து வகைகளும் கோழிக்குஞ்சுகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

**Vannam's studio**
We capture All Kind of Events
Punkankulam Jaffna.
077 352 1838

வில்வையடி,
**ஸ்ரீநாகபூஷணி அம்பாள்**
கச்சான் பிஸ்கட் தயாரிப்பு:T.S.நாதன்
இல.96/1 , ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே-021 222 0542

**மஹா விஷ்ணு ஹாட்வெயார்**
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
712, மாம்பழம் சந்தி. T.P. 077 905 0185
510,நாவலர் வீதி, நல்லூர். T.P. 077 905 0185
புங்கன்குளம் சந்தி. T.P. 077 847 0341

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில் பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்- க.முருகேந்திரன்.
174. ஆரியகுளத்தடி, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம்.

**மாருதி**
ரேடிங் சென்ரர்
16A. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
T.P- 021 222 2932

**தம்பிப்பிள்ளை அன் கோ**
**Thambippillai & Co**
(கால்நடை தீவனங்கள். மருந்து வகைகள். கோழிக்குஞ்சுகள் விற்பனையாளர்கள்)
343,கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே.021 222 3353.

உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும் கண்கவர் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றிட சிறந்த ஸ்தாபனம்.
**உதயா ஜுவல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்.
79 G, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P. 021 222 4434

**Munchee** பிஸ்கட், **Ritzbury** சொக்லேட் ஆகியவற்றின் ஏக விநியோகஸ்தர்கள்.
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
22. மானிப்பாய் வீதி. மருதனார்மடம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும் நகைகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
**சானுகா நகைமாடம்**
64. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
தொ. பே- 021 222 3700

**நியூ லக்கி ஹாட்வெயர்ஸ்**
**NEW LUCKY HARDWARES**
343, Kandy Road, Ariyalai,Jaffna.
T.P- 021 373 4432, 077 237 8062

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக முறையில் அழகிய தங்க நகைகளைக் குறித்த தவணையில் செய்து பெற்றுக் கொள்ள
**பூரணி நகைமாடம்**
46. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.தொ.பே 021 222 3121

**AGSHARA ENTERPRISES**
**VANNAM'S DISIRIBUTOR**
kanagarayan Kulam North, vavuniya.
T.P. 077 352 1838, 077 964 0500

**கொனிக்கா கலர் லாப்**
**சிறிராம் ஜுவல்லர்ஸ்**
158, 193, கஸ்தூரியார் வீதி.
தொ.பே- 021 222 8334

**BANUJAN SAW MILL**
STATE APPROVED TIMBER DEALER
NO.48, Punkankulam Road, Jaffna.

நவீன டிசைன்களில் நாகரிகத்திற்கேற்ப தங்கப் பவுண் நகைகளை நியாயமாகச் செய்து கொள்ள
**சிறி மீனாட்சி ஜுவல்லர்ஸ்**
177 B, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

**சபேஸ்**
போட்டோ
66,சந்தனமாதா கோவில் லேன். அரியாலை.
தொ.பே- 077 787 7760

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**
இல. 105. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே- 021 222 6953


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்திய மாநிலங்களவை உறுப்பினராகின்றார் கமல்ஹாசன்

### வாய்ப்பு வழங்குகின்றது தி.மு.க



(டில்லி)

இந்திய மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டது போல் மக்கள் நீதி மய்யத்திற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க மாநிலங்களவை எம்பிக்கள் எம். சண்முகம், முகமது அப்துல்லா, பி. வில்சன், பா.ம.க எம்பி அன்புமணி, அ.தி.மு.க எம்பி சந்திரசேகரன், ம.தி.மு.க எம்பி வைகோ ஆகியோரின் பதவிக் காலம் ஜூலை 24ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இந்தச் சூழலில் தமிழகத்தில் இருந்து 6 புதிய மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்வு செய்ய ஜூன் 19ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அண்மையில் அறிவித்தது.

இந்நிலையில், மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டது போல மக்கள் நீதி மய்யத்திற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தி.மு.க தலைவரும், தமிழக முதல் வருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஜூன் 19 நடைபெற விருக்கும் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் நான்கு இடங்களில், மூன்று இடங்களுக்கு தி.மு.க வேட்பாளர்களுக்கும், மற்றுமுள்ள ஒரு இடத் துக்கு ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி மக்கள் நீதி மய்யத்திற்கும் ஒரு இடம் ஒதுக்கப்படுகிறது

தி.மு.க வேட்பாளர்களாக 1. பி.வில்சன், 2.எஸ்.ஆர்.சிவலிங்கம், 3.ரொக்கையா மாலிக் என்ற கவிஞர் சல்மா ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களவை எம்.பி ஆகிறார் கமல்ஹாசன். கடந்த 2021ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் கோவை தெற்கில் போட்டியிட்டு தோல்வியைச் சந்தித்த கமல்ஹாசன், கடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க கூட்டணியில் இணைந்தார்.

அவர் மக்களவைத் தொகுதியில் போட்டியிடாத நிலையில், கூட்டணி பேச்சுவார்த்தையின் போது மாநிலங்களவை எம்.பி. பதவி வழங்குவது குறித்து உடன்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து, தி.மு.க கூட்டணிவேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுவதும் தீவிர பிரசாரம் செய்தார். மக்களவைத் தேர்தலில் தி.மு.க கூட்டணி அனைத்து தொகுதிகளையும் கைப்பற்றியது. எனவே, ஏற்கெனவே செய்யப்பட்ட உடன்பாடு அடிப்படையில் தி.மு.கவில் ஒரு எம்.பி. பதவி கமலுக்கு வழங்கப்படுகிறது.

இதன் மூலம் கமல்ஹாசன் மாநிலங்களவை எம்.பி ஆகிறார். (நி)

## வரிப்பே... நீதிமன்...

### (வோஷிங்... அமெரிக்க ட்ரம்பிற்கு வரி... இல்லை என அ... நீதிமன்றம் தீர்ப்...

New York- based Court of International Trade இன் மூன்று நீதிபதிகள் கொண்ட குழு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உலகளாவிய வரிகளை "சட்டத்திற்கு முரணானது" என தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு காங்கிரசின் அனுமதி இல்லாமல் வரி விதிப்பதற்கு அதிகாரம் இல்லை என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில், ட்ரம்ப் அனைத்து நாடுகளிலும் செயற்படுத்திய வரிவிதிப்புகளையும் நீதிமன்றம் நீக்கியுள்ளதாக சர்வதேச ...

## நடிகர் ராஜேஷ் காலமானார்!

(சென்னை)

150இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் பன்முக நடிப்புத்திறனுக்காக அறியப்பட்ட மூத்த தமிழ் நடிகர் ராஜேஷ் (வயது 75) சென்னையில் நேற்றுக் காலை காலமானார்.



குறைந்த இரத்த அழுத்தம் தொடர்பான உடல் நலக் குறைவு காரணமாக அவர் காலமானதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இயக்குநர் கே. பாலசந்தரின் பாராட்டப்பட்ட படமான அவள் ஒரு தொடர் கதை மூலம் ராஜேஷ் திரைப்படத்துறையில் அறிமுகமானார்.

பின்னர் கன்னிப் பருவத்திலே திரைப்படத்தில் முதல் கதாநாயகனாக நடித்தார்.

பல்துறைத்திறமைக்குப் பெயர் பெற்ற ராஜேஷ், வெள்ளித்திரை நடிகராக மட்டுமல்லாமல், டப்பிங் கலைஞர், எழுத்தாளர் மற்றும் தொலைக்காட்சி நடிகராகவும் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்தார்.

அவரது மறக்கமுடியாத நடிப்பில் அந்த ஏழு நாட்கள், பயணங்கள் முடிவதில்லை, சத்யா, விருமாண்டி மற்றும் மகாநதி ஆகிய படங்களில் நடித்தார்.

திரையில் அவர் கடைசியாகத் தோன்றிய படம் விஜய் சேதுபதி-கத்ரீனா கைஃப் நடித்த மெர்ரி கிறிஸ்துமஸ்.(நி)

## ட்ரம்ப் நிர்வாகத்தை விட்டு வெளியேறும் எலான் மஸ்க்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தில் இருந்து விலகுவதாக தொழில்நுட்ப கோடீஸ்வரர் எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

அங்கு அவர் மத்திய அரசாங்கத்தில் செலவுகளைக் குறைப்பதற்கான ஒரு மாத கால திட்டத்தை வழிநடத்தினார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்ட அவர்,

சிறப்பு அரசு ஊழியராக எனது திட்டமிடப்பட்ட நேரம் முடிவடைகிறது.

வீணான செலவினங்களைக் குறைப்பதற்கான வாய்ப்பிற்காக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

அமெரிக்க மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து குறைந்தபட்சம் 1 ட்ரில்லியன் டொலர்களை குறைப்பதாக வாக்குறுதி அளித்து மஸ்க் ஜனவரி மாதம் ட்ரம்ப் நிர்வாகத்தில் இணைந்தார்.

எனினும், அரசாங்கத் திறன் துறை வலைத்தளம் எலோன் மஸ்க்கின் இலக்கில் சுமார் $175 பில்லியன் சேமிப்பை மட்டுமே அடைந்துள்ளதாகக் காட்டுகிறது.

அரசாங்கத் திறன் துறை விளைவாக, 2.3 மில்லியன் பலம் வாய்ந்த கூட்டாட்சி சிவில் பணியாளர்களில் 260,000 பேர் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வெளிநாடு

# போர்: அடங்கும் ட்ரம்பின் ஆட்டம்

# ...றம் பிறப்பித்த அதிரடி உத்தரவு!

**...ங்டன்)**

**...க்க ஜனாதிபதி டொனால்ட் ...ரிகளை விதிக்க அதிகாரம் ... அமெரிக்க சர்வதேச வர்த்தக ...ர்ப்பளித்துள்ளது.**



ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கனடா அமெரிக்காவுடன் இணைந்தால் மட்டுமே கோல்டன் டோம் பாதுகாப்பு இலவசம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கனடா இதற்கு இணங்காவிட்டால் குறித்த கட்டமைப்பில் இணைவதற்கு 61 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட வேண்டுமெனவும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

குறித்த விடயத்தை அமெரிக்க ஜனாதிபதி தனது Truth சமூக ஊடக தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளார். டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதில் இருந்து அமெரிக்கா - கனடா இடையேயான உறவு மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அவரின் கூடுதல் வரி - கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பது குறித்த அழுத்தம் போன்றவை இரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறவை மோசமடையச் செய்து வருகிறது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாக கனடா இணைந்தால் தமது Golden Dome ஏவுகணைப் பாதுகாப்பு கட்டமைப்பில் இலவசமாக இணைய முடியுமென அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் நோக்கில் அமெரிக்காவினால் கடந்த வாரம் Golden Dome ஏவுகணை பாதுகாப்பு கட்டமைப்பு தொடர்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

குறித்த பாதுகாப்பு கட்டமைப்பில் இணைவதற்கு கனடா விருப்பம் தெரிவித்திருந்த நிலையிலேயே அமெரிக்க ஜனாதிபதி இந்த விடயத்தை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

...வலைகள் குறைக்கப் ...ட்டன அல்லது பணிநீக்க ...ப்பந்தங்களை ஏற்றுக் ...காண்டுள்ளனர்.

பல வழக்குகளில், கூட் ...ாட்சி நீதிபதிகள் பெரு ...ளவிலான பணி நீக்கங் ...ளைத் தடுத்து நிறுத்தி ...ள்ளனர் மற்றும் பணி ...க்கம் செய்யப்பட்ட ஊழி ...ர்களை மீண்டும் பணியில் ...மர்த்த உத்தரவிட்டுள் ...னர்.

எவ்வாறெனினும், ...லோன் மஸ்க் பதவி விலகு ...தற்கான துல்லியமான ...ழ்நிலைகள் உடனடியா ...த் தெளிவாகத் தெரிய ...ில்லை. எனினும், ட்ரம் ...ின் மார்க்யூ வரி சட்ட ...மூலத்தை விமர்சித்த ஒரு ...ாளுக்குப் பின்னர் அவர் ...வெளியேறுகிறார். (நி)

## தீக்கிரையாக்கப்பட்டுள்ள

## இளவரசி டயானாவின் பண்ணை வீடு



(லண்டன்)


மறைந்த இளவரசி டயானா வளர்ந்த அல்தார்ப் எஸ்டேட் வளாகத்தில் உள்ள ஒரு பண்ணை வீடு தீயில் முற்றிலும் அழிந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த [illegible] கிழமை அதிகாலை [illegible] மணியளவில் இங்கிலாந்தின் கிங்ஸ்டோர்பில் உள்ள மில் லேன் பகுதியில் இடம்பெற்றதாக நார்தாம்ப் டன்ஷயர் தீயணைப்பு சேவை தெரிவித்துள்ளது.

தீ விபத்தில் கட்டடம் [illegible] இருக்கலாம் என டயானாவின் சகோதரரும், எஸ்டேட் உரிமையாளருமான ஏர்ல் சார்ல்ஸ் ஸ்பென்சர் சமூக வலைத்தளங்களில் புகைப் படங்களுடன் வெளியிட்டுள்ளார்.

"யாராவது இதைப் பொழுதுபோக்கு என நினைத்தது வேதனையளிக்கிறது," எனவும், தீயணைப்புத் துறையின் அயராத முயற்சிகளுக்கு நன்றியுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அல்தார்ப் எஸ்டேட்டில் இளவரசி டயானா தனது குழந்தைப் பருவத்தை கழித்ததுடன், அதே வளாகத்தில்தான் அவரது நினைவிடமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குவைத்திலிருந்து

# நாடு கடத்தப்பட்ட 30 இலங்கையர்கள்



(கொழும்பு)

விசா இன்றி சட்டவிரோதமாகக் குவைத்தில் தங்கியிருந்த 30 இலங்கையர்கள் நாடு கடத்தப் பட்டுள்ளனர்.

30 இலங்கையர்களும் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் குவைத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந் துள்ளனர்.

இவர்கள் விசா இன்றி சட்ட விரோதமாக குவைத்தில் தங்கி யிருந்து பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். அந்நாட்டு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று நாடு கடத்தப் பட்டுள்ளனர்.

நாடு கடத்தப்பட்டவர்களை தங்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணி யகம் மேற்கொண்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1983- இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி-பா: 33
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L,கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15541

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
12இல்செவ்
கி-பா-19
உயரம்:6"
தகைமை/தொழில்-BSc,Software Engineer(pvt)
எதிர்பார்ப்பு:Teacher, தகுதியான பெண்
தொ.இ: B/15542

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்:உத்தரம்
12இல் செவ்
கி-பா-18 1/2
உயரம்:5'11"
தகைமை/தொழில்:Civil Engineer, Assistant Manager(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்(வெளிநாடு)
தொ.இ: B/15543

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்:அத்தம்
கி-பா-15 1/2
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Bcom,PGDE,DO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15544

பிறப்பு: 1991- இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
கி-பா-17 1/2
உயரம்:5'4"
தகைமை/தொழில்: A/L, Driver,கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15545

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: மகம்
1இல்செவ்
உயரம்-52 1/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BIT,Online work
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15546

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்-பரணி
கி-பா-43
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: HND(Library Science),நூலகர்
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/15547

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்-சதயம்
12 இல் செவ்
உயரம்-5
தகைமை/தொழில்-Phamacist(own)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15549

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில் -College, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/15553

பிறப்பு-1988-இந்து
நட்சத்திரம்:ரேவதி
8இல்செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில் -CIMA, Assistant Accountant
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்,வெளிநாடு
தொ.இ: G/15555

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 383



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இதயவாசல்

ஒரு பெரியவர்!

அவர் ஏழை அதனாலே ஒரு குடிசையிலே வாழ்ந்தார். ஒரு நாள் ராத்திரி நல்ல மழை பெய்து கொண்டிருந்தது.

அந்தப் பெரியவரும் அவர் மனைவியும் அந்த குடிசைக்குள்ளே தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரம் பார்த்து யாரோ திடீர்என்று சதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

அந்தப் பெரியவர் முழித்துக் கொண்டார். மனைவியை எழுப்பினார்.

"வெளியே யாரோ வழிப் போக்கர் நமக்குத் தெரியாத நண்பர் வந்திருக்கிறார் போல கதவைத் திற" என்றார் அதற்கு அந்த அம்மா....

"உள்ளே இடமே இல்லையே இரண்டு பேருக்குமே இங்கே இடம் போதாது அப்படி இருக்கும் போது இன்னும் ஒரு ஆள் எப்படி உள்ளே இருக்க முடியும்?" என்றார். அதற்கு அவர் சொன்னார்.

"இது ஏழையின் குடிசை. இதிலே எத்தனை பேர் வந்தாலும் இடம் உண்டு" என்றார்.

"நான் யதார்த்தமாகப் பேசுறேன். நீங்கள் தத்துவமாக பேசுகிறீங்களே!" என்றார்அந்த அம்மா

அதற்கு மறுபடியும் அவர் சொன்னார்:

"மனதிலே இடம் இருந்தால் இந்தக் குடிசையையே அரண்மனை மாதிரி நம்மாலே உணர முடியும் உள்ளம் குறுகியிருந்தால் ஒரு பெரிய அரண்மனை கூட சின்னதாகத்தான் தெரியும். நம் வீட்டு வாசல் தேடி வந்திருக்கும் ஒரு மனிதனை எப்படி நாம் போகச் சொல்ல முடியும்? இதுவரைக்கும் இந்தக் குடிசையிலே நாம் இரண்டு பேர் படுத்திருந்தோம்.

இந்த இடத்திலே நிச்சயமாக மூன்று பேர் படுக்க முடியாது! ஆனால் குறைந்தது மூன்று பேர் உக்காரலாம்! அதனாலே நாம் எல்லாரும் உட்கார்ந்தால்இன்னும்ஒரு ஆளுக்கு இங்கே இடம்கிடைக்கும்!" என்றார்.

அந்த அம்மா கதவைத் திறந்தார். அந்த ஆள் உடம்பு முழுவதும் நனைந்து போய் நின்று கொண்டிருந்தார்.

கதவைத் திறந்ததும் உள்ளே வந்தான். மூன்று பேரும் உட்கார்த்து பேச ஆரம்பித்தார்கள்.

சிறிது நேரம் கழித்து இன்னும் இரண்டுபேர் வந்து கதவைத் தட்டினார்கள்.

உடனே அந்தப் பெரியவர்: "வேறே யாரோ வந்திருக்காங்க போல இருக்கே போய் கதவைத் திறவுங்கள் என்றார்.

சிறிது நேரத்துக்கு முன்னால் உள்ளே வந்த ஆசாமி! "கதவைத் திறப்பதா? இங்கே இடமே இல்லையே!" என்றார்.

சிறிது நேரத்துக்கு முன்னால் இவன் வெளியிலே நின்று கொண்டிருந்தான். இந்த பெரியவர் மனதினாலே தான் தமக்கு உள்ளே இடம் கிடைத்தது என்பதை மறந்து விட்டான். "என்னத்துக்கு? கதவைத் திறக்க வேண்டுமா? வேண்டாமே" என்றான்.

"அன்புதான் உங்களுக்கு இடம் கொடுத்தது. அந்த அன்பு இன்னும் இருக்கிறது அது உங்களுடன் முடிந்து போகவில்லை. தயவு செய்து கதவைத் திறந்துவிடுங்கள்.

நாம் இப்போது கொஞ்சம் விலகித் தானே உட்காந்திருக்கிறோம் நெருங்கி கொஞ்சம் உட்காரலாம். சரியாகிப்போய்விடும்!" என்றார் அந்தப் பெரியவர். கதவைத் திறந்தார். அந்த இரண்டு பேரும் உள்ளே வந்தார்கள்.

ஒரு வழியாக சமாளித்து உட்கார்ந்து கொண்டார்கள்.

கொஞ்ச நேரம் ஆனது!

அப்போது ஒரு கழுதை வந்து நின்று கதவைத் தலையாலே முட்டியது. உடல் முழுவதும் நனைந்து குளிரிலே நடுங்கிக் கொண்டிருந்தது.

இப்போது அந்தப் பெரியவர் கதவு ஓரமாக உட்கார்ந்திருந்த ஆளிடம் "கதவைத் திறவுங்கள்" யாரோ ஒரு புது நண்பர் வந்திருக்கிறார்!" என்றார்.

அந்த ஆள் வெளியே எட்டிப் பார்த்துவிட்டு "இது கழுதை" அதுக்காக நாம் திறந்து விட வேண்டியது இல்லை" என்றான்!

"இங்கே மிருகங்களைக்கூட மனிதர்களாக நடத்தித் தான் எனக்குப் பழக்கம்! தயவு செய்து திறந்து விடுங்கள்!" என்றார். "இடம் எங்கே இருக்கு" என்று கத்தினார்கள் எல்லோரும். அதற்கு அவர் சொன்னார்.

இங்கே நிறைய இடம் இருக்கிறது உட்காருவதற்குப் பதிலாக நாம் எல்லோரும் எழுந்து நிற்கலாம். கவலைப்படாதீர்கள்!

அப்படித் தேவைப்பட்டால் நான் வெளியே இருக்கிறேன் என்றார்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்றார் திருவள்ளுவர். அது இதுதான்!"

வாழ்க்கையிலே அமைதியான நேரம் எது தெரியுமா?

எந்த விதமான நிபந்தனைகளும் இல்லாமல் அன்பு செலுத்துகின்ற நேரம். அதைவிட அமைதியான நேரம் வேறு எதுவுமில்லை என்கிறார் ஒரு பெரியவர் (ஓஷோ)

நம்ம ஆள் ஒருவர் "எங்கள் வீட்டுக்கு விருந்தினர் அடிக்கடி வருவது உண்டு சார். எவ்வளவு விருந்தாளி வந்தாலும் கதவைத் திறந்து விட்டுட்டு மரியாதையாக நான் வெளியிலே போய் விடுவேன் சார்!" என்றான்.

"ஏன் அப்படி செய்கிறாய்?"என்று கேட்டேன்.

"நான் வீட்டுக்குள்ளே இருந்தால் அவர்களுக்கு எல்லாம் சாப்பாடு போடவேண்டியிருக்கும் அதனாலே வெளியிலே போய் விடுகிறேன்!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர் மலை விவசாயிகளுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(முல்லைத்தீவு)

குருந்தூர் மலையில் கைது செய்யப்பட்ட இரு விவசாயிகளையும் ஜூன் 7 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

குமுழமுனை தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நீர்ப்பாசனத்தின் ஊடாக விவசாயம் செய்யும் நோக்கில் குறித்த காணியின் உரிமையாளர் சசிகுமார் என்பவர் தனது பணியாட்கள் மூலம் உழவியந்திரத்தின் மூலம் மே மாதம் 10 திகதி குருந்தூர் மலை பகுதியில் இரு விவசாயிகளால் உழவு செய்து கொண்டிருந்தபோது தொல்பொருள் தளத்தை சேதப்படுத்தியதாகக் கூறி, புத்த துறவி கல்கமுவ சாந்தபோதி தேரர் தொல்பொருள் திணைக்களத்துக்கு அளித்த புகாரைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணையின் பின்னர் மே மாதம் 15 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர், தொடர்ந்து மே 29 வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு மீண்டும் ஜூன் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். (நி-299)



வவுனியா கல்மடு மகாவித்தியாலயத்தில் கலை, கலாசார மற்றும் பண்பாட்டு பெருவிழா நேற்றுப் பாடசாலை அதிபர் சு.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது.

# குடிநீர் விநியோக நிலையம் முல்லைத்தீவில் திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டதுடன் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் கொக்குத்தொடு வாயில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் விநியோக நிலை யத்தினை திறந்து வைத்தார். (நி -281)

# முல்லை மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு இந்திய அரசாங்கத்தினதும் இந்திய மக்களினதும் "மனிதாபிமான உதவிகள்" வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பித்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் யாவ் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட மீனவர்கள் முப்பது பேருக்கும், அதேநேரம் முல்லைத்தீவு மாவட்ட சமாசங்களின் சங்கத்தினருக்கும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் ஆகியவற்றை வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மீனவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (நி-299)

NATIONAL FIELD WORK CENTRE, THONDAIMANARU,SRI LANKA.

FWC

## வடமாகாணத்தில் மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் 2024 வருடத்திற்குரிய க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் முதன்மைச் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவித்தல்

மேற்படி பரீட்சையில் முதன்மைச்சித்தி பெற்ற மாணவர்களை எமது நிலையம் பரிசளித்து கௌரவிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது என்பதைத் தங்களுக்கு அறியத்தருவதில் மகிழ்வுறுகின்றோம்.

மேற்படி நிகழ்விற்கு அங்கத்தவர்கள் எல்லோரும் வருகை தந்து இந் நிகழ்வை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம் : 133, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**
**காலம்:- 01.06.2025 ஞாயிறு காலை 10.00 மணி**
**பிரதம விருந்தினர் :- திரு. ப. விக்கினேஸ்வரன்**
(ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்)

**நிகழ்ச்சிகள்**

1. அக வணக்கம்
2. வரவேற்புரை
3. தலைமையுரை
4. வாழ்த்துரைகள்
5. பரிசளிப்பு
6. பிரதம விருந்தினர் உரை
7. ஏற்புரைகள்
8. நன்றியுரை

**2024 Batch Awarding Ceremony-National Field Work Centre, Thondaimanaru**

| | | |
|---|---|---|
| **All Island Rankers** | | |
| physical Science | Kandathasan Thasarath | J/Hartley College |
| Maths Stream | Malarvannan Akaran | Jaffna Hindu College |
| Biological Science | Jamunanantha Pranavan | Jaffna Hindu College |
| Bio.Stream | Yamunanantha Saravanann | Jaffna Hindu College |
| Bio.Stream | Mohamed Asshif Adhnaan Sherief | MT/Zahira College, Matale |
| Bio Stream | Pathmachuthan Thakshiniya | BT/Vincent Girls High School |
| **University Entrance, jaffna** | | |
| Commerce | Vijayasuntharam Varanan | Jaffna Hindu College |
| Arts | Mauraa Manivannan | J/Vembadi Girls High School |
| Eng. Tech | Viyakarnan Praveen | Jaffna Central College |
| Bio Tech | Jegatheeswaran Thushanth | Jaffna Hindu College |
| **University Entrance, Kilinochchi** | | |
| 2024 Batch | Name | School |
| Physical Science | Tharmarajah Attralan | Kn/Kilinochchi M.V |
| Bio. Science | Sivanujah Tharumakulasooriyan | Kn/Kilinochchi Hindu College |
| Commerce | Sooriyawararaf Thiposan | Kn/Mulankavil M.V |
| Arts. | Makenthiran Kamsa | Kn/Mulankavil M.V |
| Eng . Tech | Thiraviyaradnam Abiram | Kn/Palai Central College |
| Bio Tech | Sriranganathan Aranika | Kn/Mulankavil M.V |
| **University Entrance, Mullaitivu** | | |
| 2024 Batch | Name | School |
| Physical Science | Yogarasa Yathusan | Mu/Mallavi Central College |
| Bio. Science | Vigneswaran Narthika | Mu/Vidyananda College |
| Commerce | Alociyes Mariyadison | Mu/Udaiyarkaddu M.V |
| Arts | Pakeerathan Thanusiya | Mu/Mallavi Central College |
| Eng.Tech | Parameswaran Vanusan | Mu/Oddusuddan M.V |
| Bio Tech | Paskaran Priyanka | Mu/Vidyananda College |
| **University Entrance, Vavuniya** | | |
| 2024 Batch | Name | School |
| Physical Science | Kugathasan Thanojan | V/Kanagarayankulam M.V |
| Bio. Science | Mohommad Mubarak Muhammed | V/Vavuniya Muslim M.V |
| Commerce | Pithursha Satkunam | V/Nelukkulam Kalaimagal Vid |
| Arts | Muhammadu Faizal Fathima Asra | V/Vavuniya Muslim M.V |
| Eng Tech | Venukumar Devarashmi | V/Saivapragasa M.V |
| Bio. Tech | Santhirasegaran Rukshika | V/Saivapragasa M.V |
| **University Entrance, Mannar** | | |
| 2024 Batch | Name | School |
| Physical Science | Selwin Nimalraj Edric | Mn/St. Xavier Boys' College |
| Bio. Science | Sathananthan Ahash | Mn/St. Xavier Boys' College |
| Commerce | Arulseelan Selin Sureka | Mn/St. Xavier Girls' College |
| Arts | Jeyanthan Pavatharani | Mn/Sithyvinayagar Hindu College |
| Eng. Tech | Jeevaraj Taitas Annon | Mn/Adampan M.M.V |
| Bio Tech | Abdul Wahab Mohamed Fawsan | Mn/Erukkalampitty M.M.V |

(4408) SECRETARY, NATIONAL FIELD WORK CENTRE, THONDAIMANARU,SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் பாகம் - 4

786





அதிலும் அந்தப் பகுதி முன்னொரு நாள் அவன் சுகமாகக் காற்று வாங்கிக் கொண்டு படுத்திருந்த பகுதிதான். பெரிய தூண்களின் மறைவில் நின்று சிற்றரசர்களின் கொடிய சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்ட அதே இடந்தான். பலகையைத் தள்ளி முன்போல் மூடினான். மூடிய பிறகு, கூரையிலிருந்து அப்படி ஒரு வழி இருக்கிறதென்று கண்டு பிடிப்பது சுலபமல்லவென்பதை உணர்ந்தான். அதைப் பற்றி இப்போது யோசிக்கவும் அதிசயப்படவும் அவகாசம் இல்லை. அங்கிருந்து தப்பிச் செல்லும் வழியைப் பார்க்க வேணும். இத்தனை நேரமும் தனக்கு உதவி செய்த அதிர்ஷ்ட தேவதை இனியும் உதவி செய்யாமலா இருக்கப் போகிறது?

வந்தியத்தேவன் நாலா புறமும் சுற்றிப் பார்த்தான். எங்கு நோக்கினாலும் கொடிகளும் தோரணங்களும் பறந்து அந்த அரண்மனைப் பிரதேசம் முழுவதும் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. அடடா! இராஜோபசாரம் என்பது இதுதான் போலும். வந்தியத்தேவன் அடிமேல் அடி வைத்து மெல்ல மெல்ல நடந்தான். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு நடந்தான். எங்கும் மனித சஞ்சாரமே இல்லை. அது வரையில் நம் அதிஷ்டம் தான் பிறகு கொஞ்சம் விரைவாகவே நடந்தான்.

முன்னொரு தடவை அவன் படுத்திருந்த நிலா மாடத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கிருந்து பார்த்தபோது அரண்மனையின் வெளிமதிலும் மதில்களுக்கும் மாளிகைக்கும் நடுவிலிருந்த முற்றமும், குரவைக் கூத்து நடந்த இடமும், சதியாலோசனை நடந்த இடமும் காணப்பட்டன. ஆனால் அந்த இடங்களில் மனிதர்கள் யாரும் காணப்படவில்லை. அதற்குக் காரணம் கண்டு பிடிப்பது அவ்வளவு கடினமான காரியமாயில்லை. அரண்மனையின் முன் வாசலில் ஒரே அல்லோல கல்லோலமாயிருந்தது. நூற்றுக்கணக்கான தீவர்த்திகள் வெளிச்சம் தந்தன. மேள தாளங்கள் பேரிகை முழக்கங்களுடன் மனிதர்களின் வாழ்த்தொலிகளும் கலந்து பேரொலியாகக் கிளம்பியது. பழுவேட்டரையரின் பரிவாரங்கள் அரண்மனை வாசலை நெருங்கி வந்து விட்டபடியால் அவர்களை வரவேற்பதற்காக எல்லோரும் அங்கே போயிருக்கிறார்கள். அதனாலேதான் இங்கேயெல்லாம் ஜனசஞ்சாரம் இல்லை. ஆகா! உண்மையில் அதிர்ஷ்ட தேவதை வந்தியத்தேவன் பக்கத்தில் இருந்தாள் என்பதில் சந்தேகமில்லை. தப்பிச் செல்வதற்கு எவ்வளவு அருமையான சந்தர்ப்பம். அரை நாழிகைக்கு முன்னாலும் இத்தகைய சமயம் கிடைத்திராது. அரை நாழிகை பின்னால் வந்தாலும் இம்மாதிரி வசதி கிட்டியிராது.

சதியாலோசனை நடந்த இடத்துக்குச் சமீபமாக வந்து வந்தியத்தேவன் இன்னொரு தடவை சுற்றும் முற்றும் பார்த்தான் ஒருவருமில்லை. கீழே குனிந்து பார்த்தான் அங்கேயும் யாரும் இல்லை. எதிரில் மதில் சுவரைப் பார்த்தான் அங்கேயும் யாரும் இல்லை. ஆ! இது என்ன? மதில் மேல் கிளைகளுக்கு நடுவில் ஒரு முகம்! ஆழ்வார்க்கடியானுடைய முகம் போல் தெரிகிறதே! சீச்சீ! வீண்பிரமை! முன்னொரு தடவை ஆழ்வார்க்கடியானுடைய முகம் போல் தெரிந்த இடம் அது! ஆகையால் அவன் மனம் அவனை அப்படி ஏமாற்றிவிட்டது! அதுவும் ஒரு நல்லதற்குத்தான்.


மதில் மேல் ஏறிக் குதித்துத் தாண்டுவதற்கு அதுதான் சரியான இடம். அதை அவனுடைய உள்மனம் சுட்டிக்காட்டி ஞாபகப்படுத்தியிருக்கிறது.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## அதிபுத்திசாலிகள்



(நேற்றைய தொடர்ச்சி...)

எல்லாத் தீக்குச்சிகளும் நன்றாக எரியக் கூடியவை தான் என்று நமக்குத் தெளிவானது அல்லவா? என்றான்.

முன்பு மரத்திலிருந்து விழுந்த அறிவாளி, மற்றொரு கருத்தைச் சொன்னான்.

நண்பர்களே, நான் முன்பு மரத்திலிருந்து கீழே விழுந்த போது என் தலை கிளையில் மோதியது.

அப்போது நான் நிறைய நட்சத்திரங்களையும் தீப்பொறிகளையும் பார்த்தேன். அது போன்ற தீப்பொறிகளை வைத்து நாம் இந்த மரத்தை எரிய வைக்கலாம்.

அதற்கு என்ன செய்ய வேண்டும்? நீங்கள் என் தலையில் மாறி மாறி அடிக்க வேண்டும்.

அப்போது நான் பார்க்கும் தீப் பொறிகளை நீங்கள் உடனே பிடித்துச் சேகரிக்க வேண்டும்!" என்றான்.

நண்பர்கள் அதை ஏற்றுக்கொண்டனர். பிறகு அந்த அறிவாளியை மாறி, மாறி அடித்தனர்.

அடி வாங்கும் போது அவன் நிறைய நட்சத்திரங்களையும் தீப்பொறிகளையும் பார்த்தான்.

ஆனால், அதையெல்லாம் பிடித்து நண்பர்களிடம் கொடுப்பதற்கு அவனால் முடியவில்லை.

அவர்கள் மீண்டும் கூடி அமர்ந்து சிந்தித்தனர். அவர்களில் ஒருவன் அப்போது நல்லபடியாகச் சிந்தித்தான்.

அவன் சொன்னான். "நண்பர்களே, நாம் திரும்பிச் சென்று, வழியில் போட்டு விட்டு வந்த கோடாரிகளை மீண்டும் எடுத்து வரலாம். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை!" என்றான்.

அவ்வாறு அவர்கள் சென்று தங்கள் கோடாரிகளுடன் திரும்பி வந்தனர். தேவையான மரத்தை வெட்டி எடுத்துக் கொண்டு கிராமத்துக்குச் சென்றனர்.

தங்களது புத்திசாலித் தனத்தை நினைத்து தங்களை தாங்களே மிகவும் மெச்சிக் கொண்டனர்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம்மால் நேற்றை சரிசெய்ய முடியாது, ஆனால் நாளையை உருவாக்க முடியும். – சத்குரு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கப்பல்கள் நகரும் துறைமுகம் நகருமா?

வட பகுதியில் உரிமை கோரப்படாத 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை சுவீகரிப்புச் செய்வதென அரசாங்கம் விடுத்த வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

அதுபற்றி நேற்று (29) இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

உரிமை கோரப்படாத சுமார் 6 ஆயிரம் ஏக்கர் நிலத்தை சுவீகரிக்கின்ற அரசின் அறிவிப்பு இப்போதைக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது. இது ஒரு தற்காலிகமான ஏற்பாடு மட்டுமே.

இப்போது நாம் இங்கு கேட்பது இன்னமும் உரியவர்களால் உரிமை கோரப்படாத சுமார் 6 ஆயிரம் ஏக்கர் நிலம் தொடர்பில் நாங்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பது தான்.

அதாவது, காணி சுவீகரிப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெற வைப்பது மட்டும் பிரச்சினைக்குத் தீர்வாகாது.

மாறாக, உரிமை கோரப்படாத குறித்த காணிகள் இன்னும் ஒரு சில வருடங்கள் கடந்து சுவீகரிக்கப்படலாம்.

அவ்வாறு சுவீகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளிவரும்போது மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்து வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யப்போகின்றோமா? அல்லது உரிமை கோரப்படாத காணி தொடர்பில் பொருத்தமான தீர்வைக் காணப்போகின்றோமா? என்பதுதான் இங்கு நாம் முன்வைக்கும் விடயம்.

ஆம், வட மாகாணத்தில் சுமார் ஆறாயிரம் ஏக்கர் நிலம் உரியவர்களால் இன்னமும் உரிமை கோரப்படவில்லை என்பது வேதனைக்குரிய செய்தி.

இங்கு ஆறாயிரம் ஏக்கர் நிலம் மட்டுமல்ல, அதனையும் கடந்து உரிமை கோரப்படாத நிலங்கள் நம் வடபுலத்தில் இன்னும் அதிகமாக இருக்குமென அனுமானிப்பதில் தவறில்லை.

அதேநேரம் ஒரு துண்டுக் காணி இல்லாத குடும்பங்கள் எங்கள் மத்தியில் நிறையவே உண்டு.

இங்குதான் குறித்த ஆறாயிரம் ஏக்கர் நிலத்துக்குரிய உரிமையாளர்களை இனங்கண்டு அல்லது அவர்களின் உறவினர்களை தேடிக் கண்டறிந்து, அந்த நிலங்களை அவர்கள் மூலம் நிலமற்றவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

இதை இன்னும் விரித்துக்கூறுவதாயின், அந்தந்த பிரதேச செயலகங்கள், காணி நிர்வாகப் பிரிவுகள் மற்றும் அந்தந்த ஊர்களில் இருக்கக்கூடிய கமக்காரர் அமைப்புகள் ஒன்றுசேர்ந்து உரிமை கோரப்படாத காணிகளின் விபரங்களைப் பெற்று உரியவர்களை இனங்கண்டால், அவர்கள் நிச்சயம் காணியற்றவர்களுக்குக் காணிகளை வழங்குவதற்கு முன்வருவர்.

இதன்மூலம் காணி அற்றவர்களுக்குக் காணி கிடைப்பதுடன் காத்துக் கிடக்கும் நிலங்களில் பயிர் செய்யவும் நெல் விதைக்கவும் வாய்ப்பு ஏற்படும். எனினும் இதை யார் செய்யப்போகின்றார்கள் என்பது புரியவில்லை.

கப்பல்கள் வந்து போகலாம். ஆனால் துறைமுகங்கள் ஒருபோதும் அசைவதில்லை என்ற உண்மையை உணர்ந்து செயற்படுக.

முல்லையில் வனவளத்துறை அடாத்தாகப் பிடித்த

# தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை சுவீகரித்து சிங்களவர்களுக்குப் பங்கிட்டு மகாவலி அடாவடி

## தக்க நடவடிக்கை எடுக்குமாறு ரவிகரன் எம்.பி கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி உள்ளிட்ட எல்லைக்கிராமத் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை வனவளத்திணைக்களம் தமிழ் மக்களைத் துப்பரவுசெய்யவிடாமல் அபகரித்துவைத்திருந்த நிலையில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்குரிய குறித்த காணிகளை பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளதுடன் அக்காணிகளுக்கு அனுமதிப்பத்திரங்களையும் வழங்கி மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை அடாவடிச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் இந்த அடாவடிச் செயற்பாடு தொடர்பில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் கூட்டுறவுப் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவிடம் அவர் கோரிக்கையும் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் இவ்வாண்டிற்கான இரண்டாவது மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று (29) இடம்பெற்றது. இதில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக முல்லைத்தீவு - கொக்கிளாய் அக்கரை வெளிப்பகுதியிலுள்ள காணிகளுக்கு தமிழ் மக்களே உரித்துடையவர்கள். அந்தப் பகுதிகளிலுள்ள காணிகளுக்கு தமிழ்மக்களிடம் காணி அனுமதிப்பத்திரங்கள் உள்ளன.

இவ்வாறிருக்க அந்தப்பகுதிகளிலுள்ள தமிழ் மக்களுடைய பூர்வீகக் காணிகளை அக்காணிகளுக்குரிய தமிழ் மக்களைத் துப்பரவு செய்வதற்கு வனவளத் திணைக்களம் தடை விதிக்கின்றது.

இந்நிலையில் வனவளத் திணைக்களம் அபகரித்து வைத்துள்ள தமிழ் மக்களுக்குரிய குறித்த காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை அபகரித்து பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் போது வனவளத்திணைக்களம் வேடிக்கை பார்க்கின்றது.

பொதுவாக காணி கட்டளைச்சட்டத்தின்படி ஒரு காணிக்கு இரு ஆவணங்கள் இருந்தால் யாரிடம் காலத்தால் முந்திய ஆவணமுள்ளதோ அவருக்குத்தான் காணிக்கான முழு அதிகாரமுள்ளது.

இவ்வாறாக கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பகுதிகளில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளுக்கு, தமிழ்மக்களிடம் காலத்தால் முந்திய ஆவணங்கள் இருக்கும்நிலையில் குறித்த காணிகளுக்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை கடந்த சில வருடங்களுக்கு முன்பு பெரும்பான்மையின மக்களுக்கு புதிய ஆவணங்களையும் வழங்கியுள்ளது. இது மிகவும் மோசமான செயற்பாடென பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சுட்டிக் காட்டினார். (ம-4,7)

## பொதுக்கூட்டம்

மாவிட்டபுரம் வீமன்காமம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (1) மாலை 3.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-4,7)

## திருக்கேதீஸ்வர நாதனுக்கு நாளை கொடியேற்றம்

பஞ்ச ஈஸ்வரங்களில் தலையாயதும் தேவாரப் பாடல் பெற்ற சிவஸ்தலமுமாகிய மன்னார் மாதோட்ட நன்னகர் அருள்மிகு கௌரி அம்பிகை உடனுறை திருக்கேதீச்சரநாதர் திருக்கோவிலின் விசுவாவசு வருட மஹோற்சவப்பெருவிழாவானது நாளை சனிக்கிழமை காலை 10.35 மணிமுதல் 11.15 மணி வரையான கடகலக்கின சுப வேளையில் "திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ள கேது பகவான் வழிபட்டு உய்த்த புண்ணியஸ்தலமாகிய இச்சிவாலய பெருவிழாதனில் தேர்த் திருவிழாவானது எதிர்வரும் (08.06) ஞாயிற்றுக்கிழமை மறுநாள் பாலாவி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் பக்திபூர்வமாக இடம் பெறவுள்ளது. (ம-4,7)

## மாகாண சபைத் தேர்தலை முடிந்தால் நடத்திக் காட்டுங்கள்

பெரமுன சவால்

முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்திக் காட்டுமாறு தே.ம.சக்தி அரசுக்கு பொதுஜன பெரமுன சவால் விடுத்துள்ளது. லக்ஸ்மன் யாப்பா அபேவர்தனகட்சி சார்பில் இந்தச் சவாலை விடுத்துள்ளார்.

மேலும் அரசின் செயற்பாடுகளால் அதன் வாக்கு வங்கி சரிந்து வருகின்றது. பொய்களைச் சமூகமயப்படுத்தியதால் ஏற்படும் பிரதிபலன்களை இந்த அரசு விரைவில் உணரும் என்றார்.(ம-4,7)

## யாழில் அரங்கேறவுள்ள மாபெரும் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் யாழ்.பிராந்தியம் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் கலைவிழாவானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் கோலாகலமாக இடம் பெறவுள்ளது.

இவ்விழாவில் தென்னிந்தியத் தொலைக்காட்சிப் புகழ் ஈழத்துப்பாடகர்கள் உட்பட பல தலைசிறந்த கலைஞர்கள் சங்கமித்து பார்வையாளர்களை மகிழ்விக்கவுள்ளனர்.

விழாவுக்கான நுழைவு அனுமதியை விழா மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4,7)

## பூநகரி கௌதாரிமுனையில் இனி மணல் அகழத்தடை

### கிளி. ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முடிவு

பூநகரி கௌதாரி முனைப் பகுதியிலுள்ள மணல் திட்டுகள், இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருவதைத் தடுக்கும் நோக்கில் அப்பகுதியில் இருந்து சட்டவிரோத மணல் அகழ்வினை முற்று முழுதாக தடை செய்யத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் ஆகியோரின் இணைத்தலைமையில் இடம்பெற்றபோதே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பிரதேசத்தில் இயங்கி வரும் மணல் விற்பனை நிலையம் தொடர்ச்சியாக இயங்கி வருமாயின் கல்மடுகுளம் காணாமல் போய் விடும் அச்சம் நிலவுவதாகவும் எனவே குறித்த மணல் விற்பனை நிலையத்தினை முற்றாக மூடுவதற்கும் அபிவிருத்திக் குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

(ம-4,7,316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராமரிப்பற்ற அரச பேருந்து; சாரதிக்கு சட்டநடவடிக்கை

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அதிரடி

(வவுனியா)

**போக்குவரத்து குறைபாடுகளை கொண்ட அரச பேருந்து ஒன்றின் சாரதியின் அனுமதிப் பத்திரம் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், பத்து நாட்களுக்குள் பேருந்தை சீரமைக்காவிடில் பேருந்திற்கு நிரந்தரத் தடை உத்தரவு வழங்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

நேற்று முன்தினம் யாழில் இருந்து வவுனியா நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலைக்கு சொந்தமான பேருந்தின் சாரதிக்கே இவ்வாறு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் அரச தனியார் பேருந்துகள் வவுனியா மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரிகளால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது யாழில் இருந்து வவுனியா வந்த பல பேருந்துகளில் பல்வேறு குறைபாடுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த பேருந்துகளின் சாரதிகளுக்கு பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், சில பேருந்தின் சாரதிகளுக்கு குற்ற பத்திரங்களும் வழங்கப்பட்டது.

அத்துடன், வவுனியா சாலைக்கு சொந்தமான அரச பேருந்து ஒன்றில் பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட நிலையில் அதன் சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரம் போக்குவரத்து பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் தற்காலிக பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பேருந்தில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை எதிர்வரும் 10 நாட்களுக்குள் சரி செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சரி செய்யாத பட்சத்தில் பேருந்தின் சேவைக்கு நிரந்தர தடைஉத்தரவு வழங்கப்படும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-250)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 11 நாட்கள் மஹோற்சவ பிரதம குரு,சிவஸ்ரீ விஸ்வ விஜய குமார குருக்கள் தலைமையில் இடம் பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர் வரும் ஜுன் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 4.30 மணிக்கு திருவூஞ்சல் மற்றும் கொடியிறக்க உற்சவங்களும் இடம் பெறவுள்ளதென ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர் வை.இரகுநாத முதலியார் தெரிவித்துள்ளார். (நி-3)

# ஆசிரியர் வெற்றிடம்; நிவர்த்திக்கக் கோரி போராட்டம்




(முல்லைத்தீவு)

ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்ப கோரியும், ஆசிரியர் இடமாற்றங்களை நிறுத்தக்கோரியும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்றுக் காலை திம்பிலி ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்றிருந்தது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட திம்பிலி ஆரம்ப பாடசாலையில் இருக்கும் ஆசிரிய பற்றாக் குறையினை நிவர்த்தி செய்யுமாறும், ஏற்கனவே குறித்த பாடசாலையில் கற்பிக்கும் ஆங்கில பாட ஆசிரியரின் இடமாற்றத்தினை நிறுத்தக் கோரியும் அப்பிரதேச மக்கள் கிராம மட்ட அமைப்பினர் இணைந்து பாடசாலைக்கு முன்பாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் குறித்த கிராம மக்கள், கிராம மட்ட அமைப்பினர், நலன்விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-299)

# கொவிட் பரவலைத் தடுக்க விசேட ஏற்பாடுகள்

(கொழும்பு)

புதிய கொவிட்-19 திரிபு வேகமாகப் பரவுகிறதா என்பதைக் கண்டறிய நாடு முழுவதும் PCR சோதனைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் செயலாளரும் விசேட வைத்திய நிபுணருமான அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய கொவிட்-19 திரிபு குறித்து பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றாலும், அது நாட்டிற்குள் நுழையும் அபாயம் இல்லை என்று கூற முடியாது.

கொவிட்-19 மாறுபாட்டின் திரிவு வகைகளான NB.1.8.1, JN.1, மற்றும் LF.7 ஆகியவை இந்தியா உட்பட பல ஆசிய நாடுகளில் பரவி வருவதாக வெளியான செய்திகளுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. (நி)


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 6, இலந்தைக்குளம் வீதி, 118ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் K.சின்னத்தம்பி பெண் செல்லம்மா என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

மேற்குறித்த ஆதனத்தின் பகுதி ஆதனத்தினை தம்பு சிவவடிவேலும் பெண் சரோசாதேவியும் 2003.08.23 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.பொன்னம்பலவாணர் முகதாவில் 424 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் காமீம் பெண் ஜெரீனா என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

பின்னர் குறித்த ஆதனத்தை காமீம் பெண் ஜெரீனா அல்லது ஜெகந்தி ஜெரீனாவும். சிவவடிவேல் கைம்பெண் சரோஜாதேவியும் 2010.12.01 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 12119 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் நவரட்ணம் பெண் சுசிலாதேவி என்பவரிற்கு அறுதியாக விற்றுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை பிரப்பங்குள வளவும் மறுபிரிவுகளும்" நில.பர.4 குளி 9. இதில் தெற்குப் பக்கமாக நில.பர. 2 1/4 இரண்டேகால். இதற்கு எல்லை

கிழக்கு : கையொழுங்கை

வடக்கு : இதன் மிகுதி ஆதனம்

மேற்கு : றோட்டு

தெற்கு : முருகன் பெண் பொன்னிக்குரிய ஆதனம்

இதடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளும். இதன் வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும், கிழக்கெல்லைக் கையொழுங்கையால் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

தற்போது நவரட்ணம் பெண் சுசிலாதேவி சார்பில் அவரது அற்றோனி தத்துவகாரர்களான நடராஜா இராஜேஸ்வரனும் பெண் லலிதாவும் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நவரட்ணம் பெண் சுசிலாதேவி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-3077)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் இலஞ்சம்...

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4,33)

## குடும்பஸ்தர்...

மூன்றாம் ஒழுங்கையைச் சேர்ந்த இரத்தினம் சண்முகராசா (வயது-64) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வீட்டுக்கிணற்றடியில் தூக்கில் தொங்கிய நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-7,4,60,104)

## பயங்கரவாத...

வாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். புதிய சட்டம் அவசியமில்லை என சிவில் சமூகப் பிரதிநிதிகள் அவரிடம் விடுத்த வேண்டுகோளிற்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் தொடர்பில் சிவில் சமூக பிரதிநிதிகள் நேற்று நீதியமைச்சரை சந்தித்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச்செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் வலியுறுத்தினர்.

வரலாற்று ரீதியாக அரசாங்கம் தன்னைப் பாதுகாப்பதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டியது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நீண்ட கால தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும் அவர்களில் சிலர் 15-16 ஆண்டுகளாக குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும். அதுவரை அதன் பயன்பாட்டிற்குத் தடை விதிக்க வேண்டும். மேலும் அதை ஒரு புதிய பயங்கரவாதச் சட்டத்தால் மாற்றக்கூடாது என்றும் அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

இந்த நிலைப்பாட்டையே ஜேவிபி பல வருடங்களாகப் பின்பற்றி வந்தது. குழுவின் அமைப்பையும் அவர்கள் விமர்சித்தனர். ஏனெனில் இது பெரும்பாலும் இராணுவ மற்றும் அரசு அதிகாரிகளைக் கொண்டுள்ளது. மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதித்துவம் இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதாக நீதியமைச்சர் உறுதியளித்தார். ஆனால் வெளிநாட்டு அச்சுறுத்தல்களிலிருந்து தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய மற்றொரு சட்டம் அவசியம் என்று அவர் தெரிவித்தார். (ம-7,4)

## சூட்டுக்காயங்கள்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறைவுபெற்ற பின்னர் அது தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

அந்தவகையில் நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் குறித்த வழக்கில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சார்பான சட்டத்தரணி எஸ்.நிறஞ்சன், காணாமல் போனோர் அலுவலகம் சார்பான சட்டத்தரணிகள் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணைகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா,

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணி தொடர்பான வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது சட்டவைத்திய அதிகாரி குழுவினரால் தயாரிக்கப்பட்ட முற்றுமுழுதான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. முக்கியமாக இந்த அறிக்கையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட 52 மனித எலும்புக்கூடுகளின் வயது, பாலினம், இறப்புக்கான காரணம் என முக்கிய விபரங்கள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இங்கே நீதிமன்ற நடவடிக்கையின்போது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இறந்தவர்கள் யார் என அடையாளம் காணப்படாத நிலையில் அவர்களை மேலும் அடையாளம் காணும் முகமாக நீதவானால் காணாமலாக்கப்பட்டோர் சங்கப் பிரதிநிதிகள், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்திற்கு அவர்களை கண்டறிய உதவுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இறப்புக்கான காரணங்களாக குண்டுவெடிப்பு, சூட்டுக்காயங்கள் இருந்தது. சில எலும்புக்கூடுகளில் சில பகுதிகளே இருந்தமையால் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. இவ்வழக்கானது அடுத்த தவணைக்காக ஓகஸ்ட் மாதம் 28 ஆம் தவணையிடப்பட்டுள்ளது என்றார்.

குறித்த வழக்கு விசாரணைகள் தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சார்பான சட்டத்தரணி எஸ்.நிறஞ்சன் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஏற்கெனவே சட்ட வைத்திய அதிகாரிகளினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட இருந்தது.

இன்று (நேற்று) சட்ட வைத்திய அதிகாரியின் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் இறந்த மண்டை ஓட்டுத் தொகுதிகளில் எத்தனை ஆண்கள்? எத்தனை பெண்கள்? இறப்புக்கான காரணங்கள் போன்ற விபரங்களும் சம்பவத்திற்கான விடயதானங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த இறுதி அறிக்கைகளை அடுத்து காணாமல் போனோர் அலுவலகத்தின் இந்த இறுதி அறிக்கைகள் காணப்படுகின்ற இலக்கங்கள், அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுடைய இலக்கமாகக் கருதப்படும் இலக்கங்களை பத்திரிகைகளில் பிரசுரிக்க இருக்கிறார்கள். அந்தப் பிரசுரத்தின் பிற்பாடு இது தொடர்பான, தொடர்புடைய மக்கள் நீதிமன்றத்திற்கு வந்து நீதிமன்ற பதிவாளரிடம் இது சம்பந்தமாக தெரிவிக்கும்போது மேற்கொண்டு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட இருக்கின்றது. ஆகவே இந்த இறுதி அறிக்கையை வைத்துக் கொண்டு காணாமல்போனோர் அலுவலகம் பத்திரிகை பிரசுரத்தின் பிற்பாடு இது தொடர்பான முடிவுகளை எடுக்க இருக்கிறது எனத் தெரிவித்தார். (ம-7,4,299)

மஹஜன சம்பத
திகதி 2025.05.29
சீட்டிழுப்பு இலக்கம் 5844
Q 8 0 7 8 6 5
அத சம்பத Q 7 8 6 5
சீட்டிழுப்பு இலக்கம் 419
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1874
R 10 36 47 60 R
23083

மெகா பவர்
திகதி 29/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2192
X 20 13 43 51 79

ஜய
திகதி 2025.05.29
சீட்டிழுப்பு இலக்கம் 112
X 0 0 7 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4086
சீட்டிழுப்பு திகதி 29.05.2025
P 13 64 65 79
P

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.29
சீட்டிழுப்பு இலக்கம் 1153
தனுசு 20 22 42 48 தனுசு
29887 44

உத்தியோகபூர்வ முடிவுகள்
29.05.2025 வெற்றி வாரம் 552
J 7 0 1 3 7 9
92231
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,138,042.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2818
சீட்டிழுப்பு திகதி 2025.05.29 தினம் வியாழக்கிழமை
06 36 49 60 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,909,467.20

சனிதா
திகதி 29.05.2025 வெற்றி வாரம் 4979
16 17 22 34 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,382,619.20
82908

சசிரி
692
29.05.2025 வியாழக்கிழமை
27 29 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4530
சீட்டிழுப்பு திகதி 29.05.2025 தினம் வியாழக்கிழமை
01 29 33 39 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,136,931.20
115016


கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 25 10 27 38 69
1994
29.05.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.576,420,999.80

அத கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2644
சீட்டிழுப்பு திகதி: 2025.05.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,386,976.00
13 27 30 59 N
221744

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப்பை பஞ்சராக்கி

## இறுதி போட்டிக்கு பெங்களூர் தகுதி



ஐ.பி.எல் 2025 முதலாவது தகுதிச் சுற்றுப் போட்டியில், பஞ்சாப் கிங்ஸ் அணியை 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ரோயல் சேலஞ் சர்ஸ் பெங்களூர் அணி இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

பஞ்சாப் மாநிலம் சண்டிகரில் உள்ள மஹாராஜா யாதவிந்திர சிங் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 14.1 ஓவர்களில் 101 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

பஞ்சாப் அணி சார்பில் மார்கஸ் ஸ்டோய்னிஸ் அதிகபட்சமாக 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

பெங்களூர் அணியின் பந்துவீச்சில் சுயாஷ் சர்மா மற்றும் ஜோஷ் ஹேசில் வுட் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினர்.

பஞ்சாப் அணியின் துடுப்பாட்ட வரிசை, ஆரம்பத்திலேயே தடுமாறிய நிலையில், அணியின் முக்கிய வீரர்கள் விரைவாக விக்கெட்டுகளை இழந்ததால், பெங்களூர் பந்துவீச்சாளர்களின் ஆதிக்கத்திற்கு முன்னால் அவர்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இதனால், பஞ்சாப் அணி 101 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதன்படி 102 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 10 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பெங்களூர் அணி சார்பில் பில் சால்ட் அதிகபட்சமாக 56 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காதிருந்தார்.

இந்த வெற்றியை தொடர்ந்து, பெங்களூர் அணி ஜூன் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.பி.எல் 2025 இறுதிப் போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளது.

போட்டியின் ஆட்டநாயகனாக 3 விக்கெட்டுக்களை வீழ்த்திய சுயாஷ் சர்மா தெரிவானார். (ம-4,7)


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237



Village Hotel
Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
077 544 8503
(3992)



மணமகள் தேவை
1993 மார்கழியில் பிறந்த யாழ். இந்து குடும்பம், திருவாதிரை நட்சத்திரம், 2 ம் பாதம், 3 இல் சூரியன் செவ்வாய்
தகைமை : B.Com பட்டதாரி
தொழில் : சிறிலங்கா இன்சூரன்ஸ்
எதிர்பார்ப்பு : அரச சேவையில் பணிபுரியும் மணமகள்
077 612 5368, 077 946 1468
(1183)

மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம், கிரகபாவம் 22, செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு :
077 864 9878, 077 634 3103
(1174)

காணி விற்பனைக்கு
அச்செழு தெற்கில் ஆறரை நிலப்பரப்பு (நிலப்பரப்பு 6 ½ ) விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு :
074 251 7329
(4409)



உச்சிப் பிள்ளையார் துணை
தென்னிந்திய யாத்திரை
நாட்கள் : 12 ஆரம்பம் : 18.06.2025
தரிசிக்கும் ஆலயங்கள் : உச்சிப்பிள்ளையார் மணக்குள விநாயகர், பிள்ளையார்பட்டி விநாயகர், நவக்கிரக கோயில்கள், சந்திரன், சுக்கிரன், சூரியன், புதன், வியாழன், செவ்வாய், ராகு, கேது, சனீஸ்வரன், திருச்செந்தூர், பழனி, திருத்தணி, பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, மதுரை மீனாட்சி, இராமேஸ்வரம், சமயபுரம், திருக்கடையூர் அபிராமி, திருப்பதி, ஸ்ரீரங்கம், சாரங்கபாணி, ஆதி கும்பேஸ்வரர், திருவண்ணாமலை, சிதம்பரம், திருவானைக்காவல், திருக்காளஸ்திரி, ஏகாம்பரேஸ்வரர், சீர்காழி, வடபழனி முருகன், பஞ்சவடி ஆஞ்சநேயர், கபாலீஸ்வரர், மேல்மருவத்தூர், (மரீனா பீச்) 45 ற்கு மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம்.
வட இந்திய யாத்திரை
பத்திரிநாத் தோரநாத் யாத்திரை இமயமலைப் பயணம்
தரிசிக்கும் இடங்கள் : ஹரித்துவார், ரிசிகேஷ், கங்கோத்திரி, யமுனோத்திரி, உத்திரகாசி, ஸ்ரீரிநாத், கேதாரநாத், சரஸ்வதி நதி உற்பத்தியாகும் இடம், இந்திய - சீனா எல்லை
நாட்கள் : 12 ஆரம்பம் : 10.07.2025
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
(1181)
வட இந்திய யாத்திரை
காசி அயோத்தி சீரடி பாபா யாத்திரை
நாட்கள் : 10 ஆரம்பம் : 10.08.2025
தரிசிக்கும் ஆலயங்கள் : இராமர் கோயில், திருவேணி சங்கமம், காலபைரவர், கங்கா பூஜை, காசியில் 3 நாட்கள், சீரடி பாபா, சனி சிங்னாப்பூர், இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி, உத்திரகோசமங்கை, திருபுராணி, சென்னையில் ஒரு நாள் சொப்பிங். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் இல்லை.
ஸ்ரீரங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102, 077 736 2154



வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்(வரை)
அறிவித்தல்
அங்கத்தவர் பட்டியல் மீளாய்வு செய்தல்
எமது சங்கத்தின் அங்கத்தவர் பட்டியலின் மீளாய்வு செய்து கூட்டமொன்றில் சமூகமளித்து வாக்களிக்க தகைமையுடைய அங்கத்தவர் பட்டியலினை செம்மையாக பேணும் வகையில் அங்கத்தவர்களின் அங்கத்துவத்தினை உறுதிப்படுத்த வேண்டியுள்ளமையினால் சங்க அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் பின்வரும் விபரப்படியான தகவல்களை எதிர்வரும் 15.06.2025 ஆம் திகதிக்குள் நேரடியாக அல்லது தபால் மூலம் அல்லது தவிர்க்க முடியாத காரணங்கள் ஏதேனும் இருப்பின் தொலைபேசி மூலமாகவேனும் வழங்கி ஒத்துழைக்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.
விபரங்கள்
1. அங்கத்தவர் முழுப்பெயர்
2. பின்னுரித்தாளர் பெயர்
3. வதிவிட முகவரி
4. தேசிய அடையாள அட்டை இலக்கம்
5. தொலைபேசி இலக்கம்
6. வளர்க்கப்படும் கால்நடைகளின் விபரம்
தபால் முகவரி :
தலைவர்/ செயலாளர் வடமராட்சி, வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து), சிலையடி, மந்திகை.
தொலைபேசி இல. : 077 086 6371, 077 981 9774
(C-3080)



காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 18 பரப்பு காணி விற்பனைக்கு 18 அடி பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
♦ பலாலி வீதி, ஊரெழுப் பிள்ளையார் கோவில் முன் வீதி 150m தூரத்தில்
♦ நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், செம்மண் காணி
♦ குடியிருப்புகள் சூழவுள்ள காணி
♦ ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே
♦ பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் 6 மணி வரை
தொடர்புகளுக்கு :
076 739 0413, 077 623 4204
(4417)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org